# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).**

**********

**முறையீட்டு மனு எண். 45/18/நகராட்சி**

**ஆணை நாள். 04–03–2020**

**திரு.ம.மெய்தீன் அப்துல் காதர்,**
**168/B.5, சிவன் கோயில் தெரு,**
**காயல்பட்டினம்,**
**தூத்துக்குடி மாவட்டம்–628204.** — முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். — எதிர் மனுதாரர்.

**ஆணை.**

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம், சிவன்கோவில் தெரு, கதவு எண்..168/B.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ம.மெய்தீன் அப்துல் காதர் என்பவரது 12.03.2018 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 45/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு,பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் காயல்பட்டினம் நகராட்சி மன்றத் தீர்மான எண்.1416ன்படி (1) காட்டுதைக்காத் தெரு முதல் உச்சி மாகாளி அம்மன் கோவில் தெரு வரையிலான தார்ச்சாலை மற்றும் சிமெண்ட் கல் பதிப்புப் பணி, (2) முத்தாரம்மன்கோவில் தெரு முதல் சேதுராஜா தெரு வரை தார்ச்சாலை மற்றும் சிமெண்ட் கல் பதித்தல் பணி (3) தீர்மான எண்.1469ன்படி மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் அமைத்தல் ஆகிய பணிகளில் முறைகேடு என தெரிவித்து விசாரணைக் கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

22.05.2018 நாளிட்ட தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளரின் விளக்க அறிக்கையில், காயல்பட்டினம் நகராட்சி மன்றத் தீர்மான எண். 1416/நாள்.25.07.2017ன்படி அனுமதிக்கப்பட்ட காட்டுதைக்காத் தெரு முதல் உச்சிமாகாளியம்மன் கோவில் தெரு சந்திப்பு வரையிலான சாலையில், மழை நீர் அதிகமாக தேங்கும் இடங்களில் சிமெண்ட் பேவர் பிளாக் கல் அமைத்தும் மற்ற இடங்களில் தார்ச்சாலை அமைக்கவும் ரூ.45.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பெறப்பட்ட அனுமதியின்படி உரிய ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, இப்பணிக்காக குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. எஸ்.குமரேசன் என்பவருக்கு (மதிப்பீட்டுத் தொகையினை விட 15.99%குறைவு) பணி ஆணை வழங்கப்பட்டதாகவும், இச்சாலையில் நகராட்சி மூலம் புதிய குடிநீர் மேம்பாட்டு திட்டத்தில் குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கும்

பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் சாலை பணி அமைக்க கால தாமதம் ஏற்பட்டதாகவும், மேற்படி குழாய் பதிக்கும் பணி முடிக்கப்பட்டு தற்போது சாலை முறையாக அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு முத்தாரம்மன் கோவில் தெரு முதல் சேதுராஜா தெருவரை தார்ச்சாலை மற்றும் சிமெண்ட் கல் பதிக்கும் பணி ரூ.41.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி மன்றத் தீர்மான எண். 1416 நாள் 25.07.2017ன்படி தீர்மானிக்கப்பட்டு உரிய நடைமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எஸ்.குமரேசன் (மதிப்பீட்டினை விட 16.20% குறைவு) என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதாகவும், இச்சாலையிலும் நகராட்சி மூலம் புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் அமைக்கும் பணி, மற்றும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி மேற்கொண்டதால் பணியினை முடிக்க தாமதம் ஏற்பட்டதாகவும், மேற்படி குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு இச்சாலை தற்போது முழுமையாக முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.11.2019 நாளிட்ட காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கையில், காயல்பட்டினம் நகராட்சியில் கடந்த 40 ஆண்டு காலமாக குப்பைகளை கொட்டுவதற்கு உரகிடங்கு இல்லாததால் அரசு புறம்போக்கு நிலத்தில் கொட்டப்பட்டு வந்ததாகவும், 2014–ஆம் ஆண்டு காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் கடையக்குடி என்ற பகுதியில் நில அளவை எண்.278–ல் தனியாரிடமிருந்து சுமார் 4.50 ஏக்கர் நிலம் தானமாக பெறப்பட்டு 278/1பி என உட்பிரிவு செய்யப்பட்டு நகராட்சி பெயரில் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக தனிப்பட்ட விரோதம் காரணமாக மேற்படி இடத்தினை பயன்படுத்த முடியாத நிலையில் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தனிப்பட்ட நபர்களால் வழக்கு தொடரப்பட்டு, அதில் தோல்வியடைந்து, அதன் பின்னர் பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்து இரண்டாண்டுகள் குப்பைகளை கொட்ட விடாமல் செய்ததாகவும், ஏற்கனவே குப்பைகள் கொட்டி வந்த இடமான பப்பரபள்ளி என்ற இடத்தில் குப்பைகள் கொட்டக்கூடாது என மறியல் செய்ததைத் தொடர்ந்து திருச்செந்தூர் வட்டாட்சியர் தலைமையில் சமாதான கூட்டம் நடைபெற்றதாகவும், இதனிடையில் பசுமை தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்கு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2017–18ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.322.46 லட்சம் மதிப்பீட்டில் நகராட்சி உரகிடங்கு இடத்தில் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இக்கிடங்கிற்கு செல்ல சாலை வசதி இல்லை என ஏற்கனவே வழக்கு தொடுத்தவர்களால் புகார் தெரிவிக்கப்பட்டு பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டு, மேற்படி இடத்தினை மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் திருச்செந்தூர் வட்டாட்சியர் ஆகியோரால் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கிராம நில அளவை வரைபடத்தில் உள்ள வண்டிப்பாதையின்படி சாலை அமைக்க உத்திரவிடப்பட்டு சாலைப்பணி தொடங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கால தாமதத்தினால் ஏற்கனவே பழைய இடத்தில் கொட்டப்படும் குப்பைகளை குறைத்திட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வட்டாட்சியர் சமாதான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாலும், சிவன்கோவில் தெரு மயான இடத்தில் உள்ள காலி இடத்தில் தற்காலிகமாக onsite compost அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2017–18–ஆம் ஆண்டில் 3 மெட்ரிக் டன் அளவுள்ள இரண்டு Micro Compost centre அமைக்கவும், கூடுதலாக 1 மெ.டன் அளவுள்ள Onsite compost அமைக்கப்பட்டு செயல்பட தொடங்கியதாலும் ஏற்கனவே அமைக்கப்பட்ட Onsite compost ஐ அகற்றவேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

23.05.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 26.06.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் காயல்பட்டினம் நகராட்சி தீர்மான எண்.1445ன்படி சர்வே எண்.392/5ல் கம்போஸ்ட் சென்டர் அமைக்க தீர்மானிக்கப்பட்டு 13.10.2017ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாகவும், 02.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் பணி உத்திரவு வழங்காமலேயே 25.10.2017ல் சம்பந்தப்பட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் சில மாதங்கள் மட்டும் மேற்படி சென்டர் செயல்பட்ட நிலையில் தற்போது முழுமையாக அகற்றப்பட்டு

விட்டதாகவும், அதில் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான பொருட்கள் பழைய பொருட்கள் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

1416 மற்றும் 1462 எண்ணிட்ட தீர்மானங்களின்படி போடப்பட்ட சாலையின் நீளம் 850 மீட்டர் எனவும், இதில் 600 மீட்டர் தார்ச்சாலையாகவும் 250 மீட்டர் பேவர் பிளாக் சாலையாகவும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அளவு புத்தகம் பக்கம் 80ல் 1099.27 மீட்டர் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், திட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 3 இடங்களில் பேவர் பிளாக் சாலை அமைக்காமல் 2 இடங்களில் மட்டும் அமைத்துள்ளதால் 100 சதுர மீட்டர் பேவர் பிளாக் போடாத நிலையில் உள்ளதின் மதிப்பு ரூ.2.20 லட்சம் என தெரிவித்துள்ளார்

அளவு புத்தக எண் 79ன்படி சாலை ஓரங்களில் வரையப்படும் தெர்மா பிளாஸ்டிக் கோடுகள் 257.11 சதுர மீட்டர் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக ரூ.1,67,121.50 செலவிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் 600 மீட்டர் நீளம் கொண்ட தார்ச்சாலைக்கு 150 சதுர மீட்டர் மட்டுமே போடப்பட்டுள்ளதாகவும், திட்ட அட்டவணையில் 115 சதுர மீட்டர் மட்டுமே உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் ரூ.69,550/– முறைகேடு எனவும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு முத்தாரம்மன் தெருவரை அமைக்கப்பட்ட சாலையில் இரண்டு பேவர் பிளாக் சாலை அமைக்க திட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் ஒரு இடத்தில் மட்டும் பேவர் பிளாக் அமைக்கப்பட்டு, திட்ட அட்டவணையில் குறிப்பிடாத பல இடங்களுக்கு, தான் புகார் அனுப்பிய பின்னர் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அளவு புத்தகங்களில் உள்ள அளவின்படி சாலை அமைக்கப்படவில்லை எனவும் இதன் மூலம் ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பு எனவும் தெரிவித்துள்ளார். அளவு புத்தக பக்கம் எண்.94ன்படி ரோடுகளின் ஓரங்களில் வரையப்படும் தெர்மா பிளாஸ்டிக் கோடுகள் 224.26 சதுர மீட்டர் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக ரூ.1,45,769/– செலவிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் குறைந்த மீட்டர் நீளம் கொண்ட தார்ச்சாலைக்கு குறைந்த மீட்டர் அளவு மட்டுமே போடப்பட்டுள்ளதாகவும் திட்ட அட்டவணையில் 45 சதுர மீட்டர் என உத்தேசமாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் 25.06.2019 நாளிட்ட வாக்குமூல நகலினை காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளருக்கு 28.06.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான ஆட்சேபணை/விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளரிடம் 21.02.2020 அன்று மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது அளிக்கப்பட்ட 21.02.2020 நாளிட்ட கடிதத்தில், இப்பொருள் தொடர்பாக ஏற்கனவே 14.11.2019 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துக்களையே தெரிவித்துள்ளதுடன், ஒப்பந்தக்காரரால் செய்யப்பட்ட பணிகள் மட்டுமே அளவீடு செய்யப்பட்டு, அளவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு உயர் அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு அதன் பின்னரே பட்டியல் தொகை வழங்கப்பட்டதாகவும், புகாரில் தெரிவிக்கப்பட்ட சாலைப்பணிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளதாகவும், புகாரில் குறிப்பிட்டுள்ள பணிகளில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை எனவும், புகார்தாரர் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பணிகள் நடைபெறும் போது போட்டோ எடுத்து பணிகள் முறைகேடாக நடைபெற்றுள்ளது போல் புகார் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் 21.02.2020 நாளிட்ட நேரடி விசாரணையின்போதான விளக்க அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட தற்காலிகமாக அமைக்கப்பட்ட onsite compost மையம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுவிட்டதால் மேற்படி மையம் அகற்றப்பட்டதாகவும், சாலைப்பணிகள் யாவும் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு மட்டுமே அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு உரிய அலுவலரின்

பரிசீலனைக்கு பின்னர் தொகை வழங்கப்பட்டதாகவும், முறைகேடுகள் ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி முறையீடு தொடர்பாக காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று இம்முறையீட்டு மனு மீதான தொடர் நடவடிக்கையை கைவிட முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

16.3.20

செயலாளர்.

16.3.2020

பெறுநர்

1.திரு.ம.மெய்தீன் அப்துல் காதர்,
168/B.5, சிவன் கோயில் தெரு,
காயல்பட்டினம்,
தூத்துக்குடி மாவட்டம்–628204.

2.நகராட்சி ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3.நகராட்சிகளின் மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
மனக்காவலர் பிள்ளை நகர்
ராம்பாப்புலர் சாலை,
திருநெல்வேலி –2.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)